செப்டம்பர் 24

## *புனித உபகார மாதா*

ஸ்பெயின் நாட்டில் உள்ள பார்ஸ்லோனா நகரில் பல பிரபுக்கள் ஒன்று சேர்ந்து ஒரு சபையைத் தொடங்கியிருந்தார்கள். சபையின் நோக்கம் நோயாளிகளையும், மருத்துவமனையில் உள்ள ஏழைகளையும் பராமரிப்பது. மகமதியர் கையிலிருந்து கிறிஸ்தவ அடிமைகளையும் மீட்க வேண்டும். புனித நொலாஸ்கோ இராயப்பர். புனித ரேமுந்து பொன்னாபோர் என்ற இரு புனிதர்கள் சேர்ந்து இந்த சபையை ஒரு சன்னியாச சபையாக மாற்றினார்கள். சபையின் முன் இருந்த பிரபுக்கள் அங்கீகரித்தார்கள். இந்த சபை எங்கும் பரவியது. பிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி, போர்த்துக்கல் நாடுகளிலும் ஏனைய நாடுகளிலும் சபை பரவியது. பெண்களுக்கென்று மடங்கள் ஏற்படுத்தப்பட்டன. தேவதாயே இச்சபையின் பாதுகாவலி. எனவே இன்று இச்சபையின் விழா கொண்டாடப்படுகிறது. இச்சபையை 1218-ஆம் ஆண்டு புனித நொலாஸ்கோ இராயப்பர் ஸ்பெயின் நாட்டிலுள்ள பார்சலோனா நகரில் தொடங்கினார்.

**சிந்தனை:**

எண்ணமுடியாத மக்கள் உலகுக்கும் உடலுக்கும் பசாசுக்கும் அடிமைகளாக இருக்கிறார்கள். அடிமைத்தனத்திலிருந்து இவர்களை மீட்க நம் பரலோக அன்னை வழியாக கடவுளை மன்றாடுவோம்.

**செபம்:**

பாவிகளுக்கு அடைக்கல அன்னையே பாவிகள் மனந்திரும்ப வேண்டிக்கொள்ளும்.